நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# 2018

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

## தரம் : இடைநிலை - மேற்பிரிவு (ஆண்டு 9, 10)
## Level : Intermediate Upper (Year 9 & 10)

வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்
(வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)
Time Given : 90 Minutes (Including 10 minutes of reading time)

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

June 2018

பகுதி I

**வினாக்கள் 1 - 10 :**

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்க.**

1. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்ற பழமொழி வலியுறுத்தும் விடயம்.
   A. காற்றடிக்கும் திசைக்கு ஏற்ப துப்பரவு செய்ய வேண்டும்
   B. காற்றடிக்கின்ற போது துப்பரவு செய்ய வேண்டும்
   C. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்
   D. காற்றடிக்கும் திசைக்கு எதிராக துப்பரவு செய்ய வேண்டும்

2. "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற பழமொழி உணர்த்தும் விடயம்.
   A. விதையிலிருந்து வெளிப்படும் முளையை வைத்துக்கொண்டு அந்தப் பயிர் வளர்ந்து எவ்வாறு பயன்தரும் என்பதை அறிந்து கொள்ளலாம்
   B. முளையைப் பார்த்து பயிர் வளருமோ, வளராதோ என்பதைத் தெரிந்து கொள்ளலாம்
   C. முளை வெளிப்பட்டவுடன் அது வளர்ந்து பயன்தரும் என்பதை அறிந்து கொள்ளலாம்
   D. ஒருவருடைய சிறுவயது நடவடிக்கைகளை அவதானித்தால் அவர் பெரியவராகி என்ன செய்வார் என்பதை அறியலாம்

3. "முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல" என்ற மரபுத்தொடரின் பொருள்
   A. அடையமுடியாத பொருளுக்காக ஆசைப்படுவது
   B. தேன் குடிக்க விரும்புவது
   C. மரத்தில் ஏறிச் தேன் எடுக்க ஆசைப்படுவது
   D. எல்லாவற்றிற்கும் ஆசைப்படுவது

4. "பிடிவாதம் பிடித்தல்" என்னும் பொருளைத் தரும் மரபுத்தொடர்
   A. கங்கணம் கட்டுதல்
   B. ஒற்றைக் காலில் நிற்றல்
   C. கொடுக்குக் கட்டுதல்
   D. இரண்டு தோணிகளில் கால் வைத்தல்

5. பின்வருவனவற்றில் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று அல்லாதது
   A. சிலப்பதிகாரம்
   B. மணிமேகலை
   C. வளையாபதி
   D. கம்பராமாயணம்

6. ஐஞ்சிறுகாப்பியங்களாவன
   A. நீலகேசி, சூளாமணி, யசோதரா காவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம்
   B. நளவெண்பா, நீலகேசி, சூளாமணி, யசோதரா காவியம், உதயணகுமார காவியம்
   C. கலிங்கத்துப்பரணி, நீலகேசி, சூளாமணி, யசோதரா காவியம், நாககுமார காவியம்
   D. மூவருலா, நீலகேசி, சூளாமணீ, உதயணகுமார காவியம், நாககுமார காவியம்

7. சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தின் நாயகன் – நாயகி
   A. இராமன் – சீதை
   B. நளன் – தமயந்தி
   C. கோவலன் – கண்ணகி
   D. அரிச்சந்திரன் – சந்திரமதி

8. "சூரியனைக் கண்ட தாமரைபோல்" என்ற உவமைத்தொடர் வெளிப்படுத்துவது
   A. மகிழ்ச்சி
   B. கவலை
   C. வெறுப்பு
   D. முகமலர்ச்சி

9. “அத்திபூத்தாற்போல்” என்ற உவமைத் தொடர் பயன்படுத்தும் சந்தர்ப்பம்
   A. அபூர்வமாக நடைபெறும் நிகழ்வைக் குறிக்க
   B. அடிக்கடி நடைபெறும் நிகழ்வைக் குறிக்க
   C. இடைக்கிடை நடைபெறும் நிகழ்வைக் குறிக்க
   D. எப்போது நடைபெறும் நிகழ்வைக் குறிக்க

10. “ஆப்பிழுத்த குரங்கு போல” என்ற உவமைத்தொடர் கூறும் அறிவுரை
   A. அறிந்த விடயங்களில் தொடர்ந்து ஈடுபட்டாலும் அவற்றைக் கவனமாகச் செய்ய வேண்டும்
   B. அறியாத விடயங்களில் ஈடுபட்டு ஆபத்தை விலைக்கு வாங்கக் கூடாது
   C. எல்லா விடயங்களிலும் துணிந்து இறங்கிச் செய்யவேண்டும்
   D. தீர ஆலோசனை செயத் பின்னரே ஒரு விடயத்தை செய்யவேண்டும்

**வினா 11-15 இடைவெளிகளில் பொருத்தமான அடுக்குத் தொடர்களை வைத்து எழுதுக**

**கணீர் கணீர், கல கல, உயர உயரப் , சல சல , பொல பொல**

11. .......... .......... பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது

12. தந்தை விபத்தில் சிக்கிப் படுகாயம் அடைந்த செய்தியைக் கேட்ட இலக்கியாவின் கண்களிலிருந்து கண்ணீர் .......... .......... என்று சிந்தியது.

13. நடனமாதர்களின் கால்களில் கட்டப்பட்ட சலங்கை .......... .......... என்று ஒலித்தது.

14. நகைச்சுவை நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் பார்த்த அனைவரும் .......... .......... என்று சிரித்தனர்.

15. மலையில் ஊற்றெடுத்த நதி .......... .......... என்று பாய்ந்தோடுகின்றது.

**வினாக்கள் 16 – 20 : பின்வரும் வாக்கியங்களில் தவறாக எழுதப்பட்ட சொல் எது?**

16. பெற்றோர்கள் தங்கள் பில்லைகள் மீது அளவற்ற அன்பு கொண்டிருக்கிறார்கள்.
   A. பெற்றோர் B. பில்லைகள் C. தங்கள் D. அன்பு

17. தமிழ் நாட்டில் இயற்கையை நேசிக்கும் மக்கள் இலட்சக்கணக்கான மரக் கண்டுகளை நட்டு வருகின்றார்கள்.
   A. இயற்கை B. மக்கள் C. கண்டுகளை D. வருகின்றார்கள்

18. மாணவர்கள் கர்க்கும் பாடங்கள் ஐயம், திரிபு, இல்லாமல் கற்கவேண்டும்.
   A. மாணவர்கள் B. கர்க்கும் C. ஐயம் D. திரிபு

19. கர்ணன் அரம் செய்து அழியாப் புகழை எய்தினான்
   A. கர்ணன் B. அரம் C. புகழை D. எய்தினான்

20. மாலையில் மழரும் மல்லிகைப்பூ நறுமணம் வீசு மக்களின் மனதைக்கவர்கின்றது.
   A. மழரும் B. மல்லிகைப்பூ C. நறுமணம் D. கவர்கின்றது.

**பின்வரும் கவிஞர்கள் அல்லது புலவர்கள் பாடிய இலக்கியங்களுக்கு நேரே அவர்களின் பெயரை எழுதுக.**

புகழேந்தி, இளங்கோ, கம்பர், திருவள்ளுவர், பாரதியார்

21. திருக்குறள் ..................................

22. பாஞ்சாலி சபதம் ..................................

23. கம்பராமாயணம் ..................................

24. சிலப்பதிகாரம் ..................................

25. நளவெண்பா ..................................

**வினாக்கள் 26 – 30 சொற்றொடர்கள் : பின்வரும் சொற்றொடர்களை பொருத்தமான இடைவெளியில் எழுதுக.**

இன்பமும், துன்பமும் இரவும், பகலும் இலாபமும், நட்டமும்

வரவும், செலவும் ஆணும், பெண்ணும்

26. மனித சமுதாயத்தில் .................. .................. இரு கண்கள்.

27. .................. .................. மக்களின் வாழ்கையில் மாறி, மாறி ஏற்படும்.

28. ஒருவர் வியாபாரம் செய்யும் போது .................. .................. ஏற்படலாம்.

29. பூமி சூரியனைச் சுற்றி வருவதனால் .................. .................. ஏற்படுகின்றது.

30. .................. .................. என்ற இருவிடயங்களோடு சிக்கனமும், சேமிப்பும் என்ற இரு விடயங்களையும் இணைந்து மக்கள் வாழவேண்டும்.

**வினாக்கள் 31 – 35 : பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

31. “கடலும், கடல்சார்ந்த பிரதேசமும்” எவ்வாறு அழைக்கப்பட்டது.
A. பாலை B. குறிஞ்சி C. முல்லை D. நெய்தல்

32. “மூவேந்தர்கள்” என்று அழைக்கப்படுபவர்கள்
A. சேரர், சோழர், பல்லவர் B. சேரர், சோழர், நாயக்கர்
C. சேரர், சோழர், பாண்டியர் D. சேரர், பாண்டியர், களப்பிரர்

33. தடாகத்தில் மலரும் மூன்று மலர்கள்
A. தாமரை, அல்லி, நீலோற்பலம் B. தாமரை, அல்லி, றோசா
C. தாமரை, நீலோற்பலம், மல்லிகை D. அல்லி, நீலோற்பலம், முல்லை

34. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பாடலைப் பாடியவர்.
A. சீத்தலைச் சாத்தனார் B. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
C. பாரதியார் D. கணியன் பூங்குன்றனார்

35. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பாடலில் உள்ள கேளிர் என்ற சொலின் கருத்து.
A. குடும்பம் B. உறவினர் C. பகைவர் D. அன்பர்

**வினாக்கள் 36 – 40 பின் வரும் பாடலை வாசித்து பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

"ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடிவிளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா
சின்னப் பறவைகள் போல – நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வண்ணப் பறவைகள் கண்டால் – நீ
மனதில் மகிழ்ச்சி கொள் பாப்பா"

36. முதல் இரண்டு வரிகளிலும் வலியுறுத்தப்படுவது
A. வேகம் B. சுறுசுறுப்பு C. உழைப்பு D. ஓடுதல்

37. மூன்றாவது வரியில் குறிப்பிடப்படுவது
A. ஒற்றுமை B. வேற்றுமை C. மகிழ்ச்சி D. அன்பு

38. "குழந்தையை வையாதே" என்பதில் வைதல் என்பதன் பொருள்
A. வைத்தல் B. அடித்தல் C. ஏசுதல் (திட்டுதல்) D. துன்புறுத்தல்

39. ஐந்தாம் ஆறாம் வரிகளில் கூறப்படுவது
A. கட்டுப்பாடு B. பறத்தல் C. சுதந்திரம் D. விளையாட்டு

40. இறுதி இரு வரிகளில் கூறப்படுவது
A. பறவைகளைப்பார்த்தல் B. இயற்கையை ரசிப்பது
C. மகிழ்ச்சி அடைதல் D. மேலேயுள்ள மூன்றும் சரி

பகுதி II

**1. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

காது வழியாகக் கேட்டு பரம்பரை பரம்பரையாக தொடர்ச்சியாகப் பாடப்பட்டு வந்த பாடல்களை நாட்டார் பாடல்கள் என்று கூறுவார்கள். எனவே இப்பாடல்களை கர்ண பரம்பரைப் பாடல்கள் என்று கூறலாம். கர்ணம் என்பது, காது என்பதன் ஒத்தகருத்துள்ள சொல். பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்களின் மனதில் இயல்பாக எழுந்து அவர்களால் பாடப்பட்டவையே நாட்டார் பாடல்களாகும். வயலுக்க நீர் இறைக்கும் போது இறைத்தல் பாட்டு, நாற்று நடும்போது நடுகைப் பாட்டு, கடலுக்கு மீன்பிடிக்கப் படகிலோ, கட்டுமரத்திலோ செல்லும் போது ஏலேலோப்பாட்டு, குழந்தையைத் தூங்க வைக்கத் தாலாட்டுப் பாட்டு, இறப்பு வீட்டில் ஒப்பாரிப் பாட்டு எனப் பல்வேறு வகையான நாட்டார் பாடல்கள் உள்ளன.

"ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ ஆராரோ
பச்சை இலுப்பை வெட்டிப் பால் வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலுமோ பொன்னாலே தொடுகயிறோ முத்தாலே
முத்தான முத்தோ நீ முதுகடலில் ஆனி முத்தோ
சங்கீன்ற முத்தோ நீ சமுத்திரத்தில் ஆனிமுத்தோ
ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ ஆராரோ"

என்பது தாலாட்டு.

நீரோடை ஒன்றின் அருகாக இளம் பெண் நடந்துவந்து கொண்டிருக்கிறாள். அப்போது அவளின் மனதைக் கவர்ந்த இளைஞன் ஓடைநீரை அருந்த முற்படுகின்றான்.

“ஓடையிலே போற தண்ணீர் தும்பிவிழும் தூசி விழும்
வீட்டிற்கு வாங்க மச்சான் குளிர்ந்த தண்ணீர் நான் தாறன்”

என்று அவள் பாடுகின்றாள்.

முற்காலத்தில் வசதிபடைத்த வயோதிபரின் மனைவி இறந்துவிட்டால், அவருக்கு ஏழையான இளம் பெண்ணைத் திருமணம் செய்து வைக்கின்ற அநியாயம் தமிழ்ச் சமுதாயத்தில் நிகழ்ந்தது. இந்த வகையில் இளம் பெண்ணை பெண்பார்க்க வயோதிபர் ஒருவர் பெண்வீட்டிற்கு வருகின்றார். அவரைப் பார்த்து கோபம் கொண்ட மணப்பெண்ணின் தோழி கோபத்துடன் பின்வருமாறு பாடுகின்றாள்.

“நாணற் பூப்போல நரைத்த கிழவனுக்கு
கும்மாளம் பூப்போல இந்தக் குமர்தானோ வாழுறது
அத்தர் புனுகுகளாம் அழகான பவுடர் மணம்
இஞ்சி தின்ற குரங்குபோல இவருக்கேனோ இச்சொகுசு”

இவ்வாறு தமிழர் தம்வாழ்கையில் பல்வேறு தருணங்களில் பாடப்பட்ட நாட்டார் பாடல்கள் ஓசை நயம் மிக்க சிறந்த பாடல்கள்களாகும். இத்தகைய நாட்டார் பாடல்களை பாடுவது மிகவும் குறைந்து கொண்டு போவது கவலை அளிக்கும் விடயமாகும்.

1. நாட்டார் பாடல்கள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

2. நாட்டார் பாடல்களின் 4 வகைகளை எழுதி, அவை பாடப்படும் சந்தர்ப்பங்களையும் நேரே விடைத்தாளில் தரப்பட்டிருக்கும் அட்டவணையில் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3. தமிழர்களின் வாழ்க்கையில் தொன்றுதொட்டு பல “கர்ணபரம்பரைக் கதைகள்” சொல்லப்பட்டு வருகின்றன. கர்ணபரம்பரைக் கதைகள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

4. உரைப்பகுதியில் குறிப்பிடப்பட்ட தாலாட்டுப் பாடலில் தாய் குழந்தை மீது கொண்ட அன்பு எவ்வாறு வெளிப்படுத்தப் படுகின்றது? (2 புள்ளிகள்)

5. நாணற் பூப்போல என்று தொடங்கும் பாடலில் “இஞ்சி தின்ற குரங்கு போல” என்ற உவமைத் தொடர் குறிப்பிடப்படுகின்றது. அதிலிருந்து நீங்கள் விளங்கிக்கொள்வது என்ன? (2 புள்ளிகள்)

## பகுதி III.

**பின் வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. எனது மனதைக் கவர்ந்த கவிஞர்
2. பாடசாலை ஒழுங்கு செய்த மூன்று நாட்கள் முகாம் வாழ்க்கை
3. அன்னையர் தினம்

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2018